**வாசிக்க**: **தானியேல்** 6:14-28

**சிங்கங்களின் வாயை கட்டி தம் பிள்ளைகளுக்கு ஜெயம் தருபவர்**.

தானியேலை அழிக்கவே இந்த சதி திட்டம் தீட்டப்பட்டது என அறிந்த ராஜா, தன் ஆணைக்காக மிகவும் வருந்தினான். பின்பு தானியேலை பார்த்து நீ இடைவிடாமல் ஆராதிக்கும் உன் தேவன் உன்னை காப்பாற்றுவார் என சொல்லிவிட்டு அரண்மனை சென்றான். இரவு முழுவதும் தூங்காமல் காலை எழுந்தவுடன் சிங்ககெபிக்கு சென்று தானியேலை கூப்பிட்டு, உன் தேவன் தப்புவித்தாரா என கேட்டான். ஆச்சரியமாக தானியேல் என் தேவன் சிங்கங்களின் வாயை கட்டி என்னை காப்பாற்றினார் என்றான். உடனே சதி செய்தவர்களை சிங்ககெபியில் போட்டு விட்டு, தேசத்தின் ஜனங்களுக்கு ஒரு அவசர அறிக்கையை தயாரித்தான். தானியேலைச் சிங்கங்களின் கைக்குத் தப்புவித்த அவரே தப்பவிக்கிறவரும் இரட்சிக்கிறவரும், வானத்திலும் பூமியிலும் அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்கிறவருமாயிருக்கிறார் என்று எழுதி, இனி எல்லா ஜனங்களும் அவருக்கே பயந்து ஜீவிக்க வேண்டும் என கட்டளையிட்டதுமல்லாமல் அவனும் தேவனாகிய கர்த்தரையே தொழுதுகொண்டான்.

**கேள்வி**:

தானியேலுடைய இந்த நிகழ்ச்சியில் இருந்து நாம் என்ன கற்று கொள்கிறோம்?

**பதில்**:

இன்றைய தின தியானத்திலிருந்து தேவ ஆவியானவர் நமக்கு இரண்டு காரியங்களை கற்று தருகிறார்.

1) வேதம் நமக்கு நம் மேலுள்ள அதிகாரங்களுக்கு கீழ்படியும்படி சொல்லியிருந்தாலும், நாம் முன்னே தியானித்தத்தையே மறுபடியும் சொல்கிறேன். தேவபிள்ளைகளுக்கு எல்லா அதிகாரங்களும், கீழ்படிதலும் கர்த்தருக்குள், தேவராஜ்ஜியத்திற்கு உட்பட்டதாக இருக்கிறது. தேவராஜ்ஜியத்திற்கு விரோதமாக எழும்பும் எந்த காரியத்திற்கும் நாம் உட்பட்டவர்கள் அல்ல.

2) சட்டத்திற்கு கையொப்பம் ஆனது என அறிந்தும், தன் ஜீவனை துச்சமாக நினைத்து, தேவனுக்கடுத்த காரியங்களில் விசுவாசத்தோடு செயல்பட்ட தானியேலுகாகாக தேவன் தூதனை அனுப்பி சிங்கங்களின் வாயை கட்டி போட்டார்.

எனக்கு பிரியமானவர்களே நீங்கள் செல்லும் பள்ளி, கல்லூரி, அலுவலகம் எந்த இடமானாலும் சரி. தேவனுக்கடுத்த காரியங்களில் அவருடைய வேதத்தின்படியே நடக்கவும் ஜீவன் போனாலும் பரவாயில்லை என வசனத்தில் நிலைநிற்கவும் தீர்மானித்தால் உங்களுக்காக தேவனும் பெரிய காரியங்களை செய்வார்.

பூமியின்மேல் மனுஷனுக்கு அதிகாரம் கொடுத்தவர் யார்? பூச்சக்கரம் முழுதையும் ஒழுங்குப்படுத்தினவர் யார்? யோபு 34:13

**ஜெபம்**

ஆவியானவரே எங்களை வழிநடத்துங்கப்பா. சிங்கங்களின் வாயிலுருந்து தானியேலை தப்பிவித்தது போல். இந்த உலக இச்சிகளிலிருந்தும் பாவ வாழ்க்கயிலுமிருந்து காப்பாற்றுங்கப்பா. ஆமென்